செய்தி வெளியீட்டு எண்–859 நாள்- 04.10.2010

# <u>மீண்டும் ஒரு வாய்ப்பு – தவற விட வேண்டாம்</u>

## <u>2006, 2007, 2008 மற்றும் 2009–ம் ஆண்டுகளில் புதுப்பிக்காதவர்கள் சிறப்பு புதுப்பித்தல் சலுகையின்படி புதுப்பித்துக் கொள்ள கால நீட்டிப்பு .</u>

2006, 2007 மற்றும் 2008–ம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு முறை புதுப்பித்தல் சலுகையும், 2009–ம் ஆண்டு புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்புப் புதுப்பித்தல் சலுகையும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

கணினி வழி ஒருங்கிணைக்கும் திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டிய நிலையில் வேலைவாய்ப்பு அலுவலக அனைத்துப் பணிகளும் 01.09.2010 முதல் 14.09.2010 வரை நிறுத்தி வைக்கப்பட்டதால் இச்சிறப்புப் புதுப்பித்தல் சலுகையினை துய்க்க வேண்டிய 04.10.2010 வரையிலான காலவரையறையினை கூடுதலாக 15 நாட்களுக்கு அதாவது – 19.10.2010 வரை நீட்டித்து அரசு ஆணையிட்டுள்ளது. இந்த வாய்ப்பினைத் தவறவிடாது மேற்படி ஆண்டுகளில் தங்களின் பதிவைப் புதுப்பிக்காதவர்கள் சம்மந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு உரிய படிவத்தில் வேலைவாய்ப்புப் பதிவு அடையாள அட்டையின் நகலுடன் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமோ மனுச் செய்து தங்களின் பதிவை 19.10.2010–க்குள் புதுப்பித்துக் கொள்ளும்படி மீண்டும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் திரு. சந்தோஷ் கே மிஸ்ரா, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

திரு. சந்தோஷ் கே மிஸ்ரா, இ.ஆ.ப.,
இயக்குநர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
கிண்டி,சென்னை–32

* * *

**வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–600 009.**